# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 12,085 — 1960 මාර්තු 16 වැනි බදාදා — 16.3.1960

12,085 ம் இலக்கம் — 1960 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 16 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக் கட்டளை வி 58 — உப உணவுப் பொருட்கள்

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### நீக்கும் கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவோடு 3 (2) ம் உட்பிரிவினால் என்மேற் பாரிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு வவுனியா மாவட்டத்தின் பிரதி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), டொனல்ட் மாட்டின் அந்தோனிஸ் ஸ்பெல்ட்வின் ஆகிய நான் இக்கட்டளையால் பின்வருவனவற்றை உடன்டியாக நீக்கிவிடுகிறேன் :—

(1) 1958 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29 ம் திகதி வெளியான 11,508 ம் இலக்க இலங்கை அரசாங்க அதி விசேஷ வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட உப உணவுப் பொருட்கள் சம்பந்தப்பட்ட 25.8.58 என்னும் திகதியைக்கொண்ட 50 ம் இலக்க எனது விலைக் கட்டளை ;

(2) 1958 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ம் திகதி வெளியான 11,530 ம் இலக்க இலங்கை அரசாங்க அதி விசேஷ வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட சீரகம் சம்பந்தப்பட்ட 22.9.58 என்னும் திகதியைக் கொண்ட வி 51 ம் இலக்க எனது உணவு விலைக் கட்டளை ;

(3) 1958 ம் ஆண்டு நவம்பர் மாதம் 7 ம் திகதி வெளியான 11,580 ம் இலக்க இலங்கை அரசாங்க அதி விசேஷ வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட உருளைக் கிழங்கு சம்பந்தப்பட்ட 21.10.58 என்னும் திகதியைக்கொண்ட வி 52 ம் இலக்க எனது உணவு விலைக் கட்டளை ;

(4) 1958 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 16 ம் திகதி வெளியான 11,617 ம் இலக்க இலங்கை அதி விசேஷ வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட உருளைக் கிழங்கு சம்பந்தப்பட்ட 9.12.58 என்னும் திகதியைக்கொண்ட வி 54 ம் இலக்க எனது உணவு விலைக் கட்டளை.

1960 ம் ஆண்டு பங்குனி மாதம் 14 ம் திகதி காலை 10 மணிக்கு வவுனியாக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

டி. எம். ஏ. ஸ்பெல்ட்வின்,
வவுனியா பிரதி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு).

---

உணவு விலைக் கட்டளை வி 59 — உப உணவுப் பொருட்கள்

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவோடு 3 (2) ம் உட்பிரிவினால் என்மேற் பாரிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு வவுனியா மாவட்டத்தின் பிரதி விலைக் கட்டுப்பாட்டதிகாரி டொனல்ட் மாட்டின் அந்தோனிஸ் ஸ்பெல்ட்வின் ஆகிய நான் இக் கட்டளையால்—

(1) 1959 ம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ம் திகதி வெளியான 11,960 ம் இலக்க இலங்கை அதி விசேஷ வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1959 ம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ம் திகதி வெளிவந்த வி 54 என்னும் இலக்கமுள்ள எனது விலைக் கட்டளையை இத்திகதியில் இருந்து எடுத்துவிடுகிறேன் ;

(2) இதனோடிருக்கும் முதலாம் அட்டவணையில் 3 ம், 4 ம் பத்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் வெள்ளைச் சீனிக்கும் கறுப்புச் சீனிக்கும் மேற்படி 2 ம் பத்தியில் குறித்திருக்கும் எல்லைக்குள் இன்று துவக்கம் ஒரு அந்தரின் மொத்த விலையையும் சில்லறை விலையையும் உடன்டியாக வருமாறு விதிக்கின்றேன் ;

(3) இதனோடிருக்கும் இரண்டாம் அட்டவணையில் குறிக்கப்பட்டிருக்கும் வவுனியா தெற்கு பெரும்பாக இறைவரிப் பகுதியினும், வவுனியா வடக்கு பெரும்பாக இறைவரிப் பகுதியினும், வவுனியா கரைதுறைப்பற்று பெரும்பாக இறைவரிப் பகுதியினும் உள்ள கிராமங்களுக்கு ஏற்றவாறு எவ்வகையான சீனியை விற்பதற்கு அவ்வட்டவணையில் 3 ம், 4 ம் பத்திகளில் குறித்த விலைகளினும் பார்க்க கூடுதலாக விற்றலாகாது ;

(4) இக்கட்டளையின் நோக்கத்துக்காக —

(அ) குறிக்கப்பட்டுள்ள முதலாம் அட்டவணையில் விபரிக்கப்பட்டிருக்கும் சீனியை விற்கவோ அல்லது எத்தொகையில் ஒரு அந்தர் அல்லது அதற்கு கூட ஒரு தடவையில் திருப்பி விற்பதற்காக விற்றல் மொத்த விலையாகவே கருதப்படும் ;

(ஆ) குறிக்கப்பட்டுள்ள முதலாம் அட்டவணையில் விபரிக்கப்பட்டிருக்கும் சீனியில் ஒரு அந்தருக்கு குறைவான சீனியைப் பாவிப்புக்கு விற்றல் சில்லறை விலையாகவே கருதப்படும் ;

(5) குறிக்கப்பட்டுள்ள முதலாம் அட்டவணையில் விபரிக்கப்பட்டிருக்கும் சீனியை வேறு ஒரு பொருளுடன் சேர்த்து விற்றல் அல்லது வேறு குறைந்த தரமான சீனியுடன் சேர்த்து விற்றலாகாது ;

(6) இக்கட்டளையால் ஆகக் கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த முதலாம் அட்டவணையில் 2 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட பொருளில் சிறுதொகையும் இக்கட்டளையால் அப்பொருளுக்கு விதிக்கப்பட்ட ஆகக் கூடிய விலைகள் ஒரு அங்குல உயரத்துக்கு குறையாத எண்களில், விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி அப்பொருளையும் ஆகக்கூடிய விலையையும் வாங்குபவரால் நன்றாகப் பார்க்கக் கூடியவாறு அக்கொள்கலத்தில் இணைத்துப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(7) இக்கட்டளையால் ஆகக் கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள எத்தொகையான சீனியை மொத்தமாகவோ அல்லது சில்லறையாகவோ விற்கும் ஒவ்வொருவரும் வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின் வருவனவற்றைக் குறித்து பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமெனக் கட்டளையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்ற சீனியின் தொகை (நிறையில்) ;

(இ) விற்ற சீனிக்குக் கொடுக்கப்பட்ட தொகை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது.

1960 ம் ஆண்டு பங்குனி மாதம் 14 ம் திகதி காலை 10 மணிக்கு வவுனியாவில் கையொப்பமிடப்பட்டது.

டி. எம். ஏ. ஸ்பெல்ட்வின்,
வவுனியா பிரதி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு).

### முதலாம் அட்டவணை

| பத்தி1 | பத்தி 2 | பத்தி 3 கறுப்புச் சீனி | | பத்தி 4 வெள்ளைச் சீனி | |
|---|---|---|---|---|---|
| நம்பர் | பகுதி | அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விலை ரூ. ச. | ருத்தல் ஒன்றின் ஆகக்கூடிய சில்லறை விலை ரூ. ச. | அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விலை ரூ. ச. | ருத்தல் ஒன்றின் ஆகக்கூடிய சில்லறை விலை ரூ. ச. |
| 1. | வவுனியா பட்டணம் | 61 33 | 0 58 | 68 53 | 0 65 |
| 2. | மாங்குளம் | 61 99 | 0 58½ | 69 19 | 0 65½ |
| 3. | நெடுங்கேணி | 62 22 | 0 59 | 69 42 | 0 66 |
| 4. | முல்லைத்தீவு | 63 83 | 0 60 | 71 3 | 0 67 |

### இரண்டாம் அட்டவணை

வவுனியா பகுதியைச் சேர்ந்த ஒவ்வொரு பகுதியிலுமுள்ள கிராம விதானையின் பகுதிகளில் விற்க வேண்டிய ஆகக்கூடிய சில்லறை விலைகள் ஒவ்வொரு கிராமங்களுக்கு எதிரே குறிக்கப்பட்டிருக்கின்றன.

| பத்தி 1 நம்பர் | பத்தி 2 விபரம் | பத்தி 3 கறுப்புச் சீனிக்கு கொடுக்க வேண்டிய சில்லறை விலை ரூ. ச. | பத்தி 4 வெள்ளைச் சீனிக்கு கொடுக்க வேண்டிய சில்லறை விலை ரூ. ச. |
|---|---|---|---|
| 1. | வவுனியா தெற்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பகுதியைச் சேர்ந்த வவுனியாப் பட்டணம், புதுக்குளம், ஆசிகுளம், கல்லிக்குளம், ஈரப்பெரியகுளம், நெளுக்குளம், மடுக்கந்தை போன்ற கிராம விதானையின் பகுதிகள் | 0 58 | 0 65 |
| 2. | (அ) வவுனியா தெற்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பகுதியைச் சேர்ந்த நாவற்குளம், மருதமடு, இராசேந்திரன்குளம், சூடுவெந்தபுலவு, மாமடு, உளுக்குளம், செட்டிகுளம், செட்டிகுளம் பகுதியில் மாங்குளத்தைத் தவிர்ந்த கப்பாச்சிபோன்ற கிராம விதானையின் பகுதிகள்<br>(ஆ) வவுனியா வடக்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பகுதியைச் சேர்ந்த கனகராயன்குளம், மாங்குளம், ஒலுமடு, பனையவாடி, ஆனந்தர்புளியங்குளத்தைப்போன்ற கிராம விதானையின் பகுதிகள் | 0 58½ | 0 65½ |
| 3. | (அ) வவுனியா தெற்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பகுதியைச் சேர்ந்த வாழவைத்த குளம், செட்டிகுளத்தில் மாங்குளம் கிராமம் போன்ற கிராம விதானையின் பகுதிகள்<br>(ஆ) வவுனியாவடக்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பகுதியைச்சேர்ந்த மருதோடை, நெடுங்கேணி, பழம்பாசி போன்ற கிராம விதானையின் பகுதிகள் | 0 59 | 0 66 |
| 4. | வவுனியா கரைதுறைப்பற்று உத்தியோகத்தரின் பகுதியைச் சேர்ந்த முல்லைத்தீவு, வெள்ளை முள்ளி வாய்க்கால் போன்ற கிராம விதானையின் பகுதிகள் | 0 60 | 0 67 |
| 5. | (அ) வவுனியா வடக்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பகுதியைச் சேர்ந்த கறுப்பட்ட முறிப்பு, கச்சிலமடு<br>(ஆ) வவுனியா கரைதுறைப்பற்று உத்தியோகத்தரின் பகுதியைச் சேர்ந்த அம்பலவன் பொக்கணை, புதுக்குடியிருப்பு, குமுளமுனை, தனியூற்று, முள்ளியவளை போன்ற கிராம விதானையின் பகுதிகள் | 0 60½ | 0 67½ |
| 6. | வவுனியா கரைதுறைப்பற்று உத்தியோகத்தரின் பகுதியைச் சேர்ந்த் கொக்குத்தொடுவாய், கொக்கிளாய் போன்ற கிராம விதானையின் பகுதிகள் | 0 61 | 0 68 |

குறிப்பு.—இந்த விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்க வேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல ; இவை ஆகக் கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்றலாகாது.

உணவு விலைக்கட்டளை வி 60. உப உணவுப் பொருட்கள்-(மைசூர்ப் பருப்பு)

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3(2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினுல் என் மேற் பாரிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு வவுனியா மாவட்டத்தின் பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), டொனல்ட் மாட்டின் அந்தோனிஸ் ஸ்பெல்ட்வின் ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1959 ம் ஆண்டு ஆனி மாதம் 15 ந் திகதியைக் கொண்ட 11,775 ம் இலக்க விசேட இலங்கை வர்த்தமானப் பத்திரிகையில் 1959 ம் ஆண்டு ஆனி மாதம் 12 ம் திகதியைக் கொண்ட வி 57 ம் இலக்கமுள்ள எனது விலைக்கட்டளையை எடுத்துவிடுகிறேன்.

(2) இதனுேடிருக்கும் முதலாம் அட்டவணையில் 2 ம் பத்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் ஒரு மொத்த அந்தர் ஒன்றின் மொத்த விலையையும் மேற்படி 2 ம் அட்டவணையில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் எல்லைக்குள் குறித்த 2 ம் பத்தியில் குறித்த விலையுடன் சேர்த்தால் அவ்வப்பகுதியில் கூட்டி விற்கும் மொத்த விலையாகவே கருதப்படும் ;

(3) இதனுேடிருக்கும் முதலாம் அட்டவணையில் 3 ம் பத்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் ஒரு நிகர ருத்தலின் சில்லறை விலையையும் மேற்படி 2 ம் அட்டவணையில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் எல்லைக்குள் குறித்த 3 ம் பத்தியில் குறித்த விலையுடன் சேர்த்தால் அவ்வப் பகுதியில் கூட்டி விற்கும் நிகர ருத்தல் ஒன்றின் சில்லறை விலையாகவே கருதப்படும்.

(4) இக்கட்டளையின் நோக்கத்துக்காக :—

(அ) குறிக்கப்பட்ட முதலாம் அட்டவணையில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது அப்பொருளில் 28 ருத்தல் நிறை உள்ள பொருள் அல்லது அதிற் கூடிய தொகை ஒரு தடவையில் விற்றல் மொத்த விலையாகவே கருதப்படும் ;

(ஆ) குறிக்கப்பட்ட முதலாம் அட்டவணையில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் பொருளில் 28 ருத்தலுக்கு குறைந்த அப் பொருளைப் பாவிப்புக்கு அல்லது உபயோகத்துக்கு விற்றல் சில்லறை விலையாகவே கருதப்படும்.

(5) இக்கட்டளையால் ஆகக் கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த முதலாம் அட்டவணையில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் அப்பொருளுடன் வேருெரு பொருளைக் கலந்து விற்றலாகாது எனக் கட்டளையிடுகிறேன்.

(6) இக்கட்டளையால் ஆகக் கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த முதலாம் அட்டவணையில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் அப்பொருளை தம் வசத்தில் தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட பொருளின் சிறு தொகையையும், இக்கட்டளையால் அப்பொருளுக்கு விதிக்கப்பட்ட ஆகக் கூடிய விலைகள், ஒரு அங்குலத்துக்கு குறையாத எண்களில் விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி அப்பொருளையும் ஆகக் கூடிய விலையையும் வாங்குபவரால் நன்ருகப் பார்க்கக் கூடியவாறு, அக்கொள்கலத்தில் இணைத்துப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமெனக் கட்டளையிடுகிறேன்.

(7) இக்கட்டளையின் நோக்கத்துக்காக " இருத்தல் " அல்லது " இரு. " என்பது அவோடுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் முறையாகக் கருதப்படுமென கட்டளையிடுகிறேன்.

(8) இக்கட்டளையால் ஆகக் கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த முதலாம் அட்டவணையில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் பொருளை மொத்தமாகவோ அல்லது சில்லறையாகவோ விற்கும் ஒவ்வொருவரும் வாங்குவோர் கேட்கு மிடத்து அன்னுருக்கு பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச் சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமெனக் கட்டளையிடுகிறேன்.

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்பனை செய்யப்பட்ட பொருளின் நிறை ;

(இ) விற்ற பொருளுக்கு கொடுக்கப்பட்ட விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது.

(9) குறித்த முதலாம் அட்டவணையில் 2 ம், 3 ம் பத்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் ஆகக் கூடிய விலையும் சில்லறை விலையும் குறிப்பிட்ட விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது வைத்துக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகப்படின் அதன் விலையும் அடங்க வேண்டுமெனக் கட்டளையிடுகிறேன்.

1960 ம் ஆண்டு பங்குனி மாதம் 14 ம் திகதி காலை 10 மணிக்கு வவுனியாக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

டி. எம். ஏ. ஸ்பெல்ட்வின்,
வவுனியா பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு).

### முதலாம் அட்டவணை

வவுனியா தெற்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் (தமிழ்) பகுதிக்குச் சேர்ந்த ஆசிகுளம், வவுனியா, நொச்சிமோட்டை, நெளுக்குளம், புதுக்குளம்.

வவுனியா தெற்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் (சிங்கள) பகுதிக்குச் சேர்ந்த மடுக்கந்தை, ஈரப்பெரியகுளம்.

| நம்பர் | பத்தி 1<br>விபரம்<br>எவ்விடத்திலிருந்து வருவது என்பது | பத்தி 2<br>மொத்த அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விலை<br>ரூ. ச. | பத்தி 3<br>நிகர ருத்தல் ஒன்றின் சில்லறை வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக் கூடிய சில்லறை விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|
| 1 | மசூர்ப்பருப்பு இந்தியா, பாகிஸ்தான் .. .. | 50 54 .. | 0 51 |
| 2 | எத்தியோப்பியா, எடின், சீரியா், லெபனுன், பர்மா மற்றும் தேசங்களில் இருந்தும் .. | 71 54 .. | 0 73 |

## இரண்டாம் அட்டவணை

| நம்பர் | பத்தி 1<br>பகுதி | பத்தி 2<br>1 ம் அட்டவணையில் 2 ம் பத்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் விலையினும் பார்க்க ஒரு மொத்த வியாபாரி நிகர அந்தர் ஒன்றுக்கு சேர்த்து விற்கும் விலை<br>ரூ. ச. | | பத்தி 3<br>1 ம் அட்டவணையில் 3 ம் பத்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் விலையினும் பார்க்க ஒரு சில்லறை வியாபாரி நிகர றுத்தல் ஒன்றுக்கு சேர்த்து விற்கும் விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|---|
| 1 | வவுனியா தெற்கு இறைவரி உத்தியோகத்தர் (தமிழ்) பிரிவுக்குச் சேர்ந்த மருதங்குளம், மருதமடு, இராசேந்திரன்குளம்<br>வவுனியா தெற்கு இறைவரி உத்தியோகத்தர் (சிங்களம்) பிரிவுக்குச் சேர்ந்த சூடுவெந்த புலவு, மருதமடுவைத் தவிர்ந்த உளுக்குளமும் | 0 25 | .. | 0·01 |
| 2 | வவுனியா தெற்கு இறைவரி உத்தியோகத்தர் (தமிழ்) பிரிவுக்குச் சேர்ந்த புளியங்குளம், வாகைகட்டின ஒலுக்குளம், வாழவைத்தகுளம்<br>வவுனியா தெற்கு இறைவரி உத்தியோகத்தர் (சிங்கள) பிரிவில் உளுக்குளம் பகுதிக்குச் சேர்ந்த மருதமடு விதானையின் பகுதி | 0 50 | .. | 0 01 |
| 3 | வவுனியா வடக்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்த நெடுங்கேணி, மாங்குளம், ஒலுமடு, கனகராயன் குளம், புளியங்குளம் .. | 0 50 | .. | 0 01 |
| 4 | வவுனியா வடக்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்த பரந்தன், மணவாளன்பட்டமுறிப்பு, தண்டுவான், கச்சிலமடு, ஊஞ்சல்கட்டி .. | 75 | .. | 0 02 |
| 5 | வவுனியா கரைதுறைப்பற்று பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்த முள்ளியவளை, தனியூற்று, முல்லைத்தீவு, வெள்ளைமுள்ளிவாய்க்கால் .. | 1 00 | .. | 0 02 |
| 6 | வவுனியா கரைதுறைப்பற்று பெரும்பாக இறைவரி உத்தியோகர்தர் பிரிவுக்குச் சேர்ந்த குமுளமுனை, புதுக்குடியிருப்பு, அம்பலவன்பொக்கணை .. .. | 1 25 | .. | 0 02 |
| 7 | வவுனியா கறைதுறைப்பற்று பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்த கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் .. .. .. | 1 50 | .. | 0 03 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல ; இவை ஆகக் கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்றலாகாது.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.